மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) மொத்தம் 82 மனுக்கள் கொடுக்கப்பட்டன. அவற்றில் 47 மனுக்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பைசலாகியுள்ளன. மீதியுள்ள 35 மனுக்கள் பரிசீலனையில் இருக்கின்றன. இவற்றின்மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பைசலாகியுள்ள 47 மனுக்களின் விபரம் பின்வருமாறு—

பதிவு மாற்றம் சம்பந்தப்பட்டவை	12
பாலாறு பேசின் விதிகள்	
நில ஒப்படைப்பு	10
இதர விசயங்கள்	25
	47

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, வாலாஜா வட்டத்தில் உள்ள இந்த நந்தியாலம் பகுதியிலே சாணாம்பட்டு, மாங்குப்பம் கிராமங்களுக்குப் போய்வர சாலை வசதிகள் வேண்டுமென்று அந்தப் பகுதிகளிலேயுள்ள மக்கள் மனுக்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கிராமங்களுக்கு மனிதர்கள் கால் நடைப் பாதை வழியாகவே நடந்து செல்லவேண்டும். வேறு வசதிகள் இல்லை. எனவே, பாதை வசதிகள் அங்கே ஏற்படுத்தித் தருவதற்கு அந்த மனுக்களிலே கேட்டுக்கொண்டுள்ளபடி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எல்லோரும் எல்லாக் கிராமங்களுக்கும் காலால்தான் நடந்து செல்லவேண்டும். அதைப்பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. குறிப்பாக எழுதியனுப்பினால் கவனிக்கப்படும்.

நீதி மன்றங்கள்

* 15 வினா—**திரு. ரா. ரா. முனுசாமி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செஞ்சி வட்டத்தில் ஓர் முன்சிப் கோர்ட் ஏற்படுத்தத் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, செஞ்சியிலிருந்து திண்டிவனத்திலிருக்கின்ற முன்சீப் கோர்ட்டிற்குச் சராசரியாக அதிகமான கேஸ்கள் சென்று கொண்டிருக்கின்றன. அங்கேயுள்ளவர்கள் எல்லாம் பல மனுக்கள் கொடுத்து செஞ்சியில் ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். திண்டிவனத்திலே ஒரு அடிஷனல் முன்சிப் கோர்ட் ஏற்படுத்துவதற்குப் பதிலாகத் தனியாக செஞ்சியிலே ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: செஞ்சியிலிருந்து திண்டிவனம் 18 மைல் என்று கருதுகிறேன். அங்கே டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் வைக்கலாம்

என்ற யோசனை உயர்நீதி மன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் போதுமான அளவுக்குவேலை இருக்காது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

* 16 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் சப்-கோர்ட் திறக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) 'இம்மாநிலத்தில் உள்ள நாட்டியல் (சிவில்) குற்றவியல் (கிரிமினல்) நீதி மன்றங்களின் அதிகார வரம்பினை ஆராயும் குழு' இப்பொருள்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கரூர் ஒரு பெரிய நகரம். மேலும் டிவிஷனல் ஹெட்குவார்ட்டர்ஸ் கரூரில் இருக்கிறது. அதைச் சுற்றிப் பல இடங்கள் இருப்பதால், இந்த சப்-கோர்ட் அமைக்கும் முயற்சியைத் துரிதப்படுத்த ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இந்த ஆராயும் குழுவிடத்தில் இந்தப் பிரச்னையை வைக்கவேண்டுமென்று உயர்நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த சப் கோர்ட், டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் அமைப்பது சம்பந்தமாக வரதராஜன் கமிட்டி அமைத்து ஒரு ஆண்டுக்கு மேலாகிவிட்டது. அவர்கள் எப்பொழுது சிபார்சைக் கொடுப்பார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் மாநிலத்தில் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று ஆங்காங்கு பொதுமக்களையும், வழக்குரைஞர்களையும் சந்தித்துக் கருத்துக்களைச் சேகரிக்கிறார்கள். அவைகளெல்லாம் முடிந்தபிறகு விரைவில் தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Release of prohibition offenders

***17 Q.**—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that prohibition offenders have been released around 4th week of August 1971 due to scrapping of prohibition throughout the State ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) மதுவருந்திய அல்லது மது வாங்கிய குற்றத்திற்காக அல்லது குடிபோதையில் இருந்த குற்றத்திற்காகத் தண்டனை அனுபவித்து வந்த கைதிகளுக்கு மட்டுமே தண்டனை குறைப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. மொத்தத்தில் 802 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.